மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 133/2022 |
| பெயர் | : | ராமலெட்சுமி (PW1) |
| க/பெ | : | பொன்னுசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5 th day of March 2025

**1,4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1) என் கணவர் வங்கியிலோ, வேறு யாரிடமோ அதை அடைக்க வேண்டிய பொறுப்பு எனக்கும் என் குடும்பத்தாருக்கும் உண்டு என்றால் என் கணவர் கடன் பெறவில்லை, அவர் யாரிடம் கடன் பெற்றார் என்று எனக்கு தெரியாது.என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது கணவர் பணம் பெற்றதாக சொல்லி கையொப்பம் பெற்றுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது எனக்கு படிப்பறிவு இல்லாததால் என் கணவரின் கையொப்பம் பற்றி எனக்கு தெரியாது.

2)1992 கலவரத்தின் போது நாங்கள் தூத்துக்குடி மாப்பிள்ளையூரணிக்கு சென்றுவிட்டோம் என்றால் அப்போது செல்லவில்லை , அதன்பின்னர் சென்றுவிட்டோம்.பிரதிவாதி தபசில் சொத்தில் நான் விவசாயம் செய்ததை தடுத்ததாக சொல்லி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை நீதிமன்றத்தில் தான் வழக்கு தொடுத்துள்ளேன்.

3)பிரதிவாதிகள் 35 வருடங்களாக தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல நான் தான் அதை அனுபவம் செய்து வருகிறேன்.அவர்கள் அனுபவம் செய்து வருவதால் அவருக்கு எதியிடை பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.தாவா சொத்தின் மதிப்பு தற்போது எவ்வளவு என்றால் மதிப்பு பற்றி எனக்கு தெரியாது.தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் ஐந்து லட்சம் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.நான் சொத்தின் மதிப்பை குறைவாக காட்டி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4)உரிய காலத்தில் சொத்தினை மீட்கததால் வழக்கு கால தோஷத்ததாலும் பிரதிவாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.வழக்கின் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.